7. உகாதி பண்டிகைக்கு அரசு விடுமுறை அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கோபிநாத், சொல்லுங்கள்.*

திரு. கே. கோபிநாத்: Hon' ble Speaker Sir, *(உறுப்பினர் தெலுங்கில் பேசினார்).*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவர் அனுமதி கேட்டார். ஆனால் என்ன சொல்கிறார் என்றே தெரியவில்லை எனக்கு. (சிரிப்பு)*

திரு. கே. கோபிநாத்: *(உறுப்பினர் தெலுங்கில் பேசினார்.)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Leave *கேட்கிறார்.*

திரு. கே. கோபிநாத்: *(உறுப்பினர் தெலுங்கில் பேசினார்.)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி கோபிநாத், அரசுக்குச் சொல்லிவிட்டீர்கள் அவ்வளவுதான். பரிதி ஏதோ கேட்கவேண்டும் என்றீர்களே, கேளுங்கள்.*

திரு. கே. கோபிநாத்: *(உறுப்பினர் தெலுங்கில் பேசினார்.)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்துவிட்டீர்கள்.*

திரு. கே. கோபிநாத்: *(உறுப்பினர் தெலுங்கில் பேசினார்)* Government Holiday *வேண்டும் உகாதிக்கு. அதை* declare *செய்யவேண்டும். அது இதுவரையிலும் இருந்தது.*

(உறுப்பினர் தொடர்ந்து தெலுங்கில் பேசினார்.)

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* (*தெலுங்கில் பேசினார்.*) *(சிரிப்பு) சரி.* calendar–லே, it is on 9th. *சரி. சனி வாரமே...சனி வாரமே... சனி வாரம்* already Government Holiday. *(தெலுங்கில் பேசினார்) (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 11–25

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கோபிநாத் பேசியதும் முதலமைச்சர் அவர்கள் பேசியதும் எங்களுக்கு என்னவென்றே தெரியவில்லை.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானே மொழிபெயர்த்து சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் கோபிநாத் அவர்கள் உகாதி பண்டிகையை ஒரு விடுமுறையாக அறிவிக்க வேண்டும்; அரசு விடுமுறையாக அறிவிக்க வேண்டுமென்ற கோரிக்கையை இங்கே வைத்தார். இந்த ஆண்டு உகாதி பண்டிகை வருகிற 9 ஆம் தேதியன்று வருகிறது. ஆகவே, 9 ஆம் தேதி அன்று தெலுங்கு பேசுகின்ற மக்களுக்கும், கன்னடம் பேசுகின்ற மக்களுக்கும் புத்தாண்டு, உகாதி என்பதால் அவர்களுக்கு முதலில் என் நல்வாழ்த்துக்களை நான் தெரிவித்துக்கொண்டேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* ஏற்கெனவே அரசு விடுமுறைகள் மிக அதிகமாக உள்ளன என்று பலரும் கருத்து தெரிவித்துள்ளார்கள். இந்த ஆண்டு உகாதி பண்டிகை ஒரு விடுமுறை நாளில்தான் வருகிறது. சனிக்கிழமை. ஆகவே, இந்த ஆண்டு விடுமுறை அறிவிக்க வேண்டிய அவசியமில்லை. எதிர்காலத்தில் வேண்டுமானால், Restricted Holidays என்ற ஒரு பட்டியல் உள்ளது. அரசு விடுமுறைகள் பொதுவாக அனைவருக்கும் விடுமுறை நாளாகும். Restricted Holidays பட்டியலில் குறிப்பிட்ட சில பண்டிகைகள் உள்ளன. யார் விரும்புகிறார்களோ அன்றையதினம் அவர்கள் அன்றைக்கு விடுமுறை எடுத்துக்கொள்ளலாம். ஆகவே, இந்த Restricted Holidays பட்டியலில் உகாதி பண்டிகை இருக்கிறதா என்று பார்க்கிறேன், இல்லையென்றால் சேர்க்கிறேன் என்று சொன்னேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கோபிநாத், பேசி முடியுங்கள்.

திரு. கே. கோபிநாத்: *(தெலுங்கில் பேசினார்.) (மேசையைத் தட்டும் ஒலி)*

4. உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு—தொடர்ச்சி

திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காடுகளை வளர்ப்பதும், அவற்றைப் பாதுகாப்பதும், அவற்றை அழிவிலிருந்து தடுப்பதும்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. பரிதி நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள் என்று தெரிகிறது. ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்பு ஒன்று கொடுத்திருக்கிறீர்கள். அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. அதை எப்போது எடுத்துக்கொள்ள வேண்டுமோ அப்போது எடுத்துக்கொள்வேன்.